MCOP.No. 405/2024

Date : 29.01.2026

Witness Name & Rank – பிரியதர்ஷன் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 14/10/2023 ஆம் தேதி நடந்தது. விபத்து நடந்த சாலை ஆனது குறுகிய கிராமத்திற்கு செல்லும் சாலை என்றால் சரிதான். எனது வழக்குப்படி விபத்தானது எனக்கு எதிரில் வந்த வாகனம் மோதி தான் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கவனக்குறைவால் தான் எதிரில் வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தான் எனது இருசக்கர வாகனத்தில் சாலையின் வலது பக்கம் சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது வாகன ஆய்வறிக்கையில் எனக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் எனது வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லை என்றும் அதேபோல் எனது வாகனத்திற்கு உரிய தகுதிச் சான்றும் இல்லை என்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் குறிப்பானை வழங்கியுள்ளார் எனவே தான் எனது ஆய்வறிக்கை வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.
2. எனது வாகனத்திற்கு சாலையில் செல்ல உரிய தகுதிச் சான்று இல்லை அந்த வாகனத்தில் உரிய ஓட்டுனர் இல்லாமல் வண்டி ஓட்ட தெரியாமல் நான்தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதேபோல் ஒன்றாவது எதிர்மனுதாரருக்கும் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்ட ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் கையொப்பம் இல்லை எனவே அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் வண்டி எண் போன்ற தகவல்கள் குறிப்பிட்டு இல்லை எனவே அவை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றால் சரியல்ல மேற்படி ஆம்புலன்ஸ் பில்கள் ஒவ்வொன்றும் முரண்பட்டு உள்ளது எனவே அவை ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல. அதேபோல் ஒரே தேதியில் இரண்டு வெவ்வேறு பில்கள்

உள்ளது அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

3. நான் மெக்கானிக்காக வேலை செய்து வந்ததாகவும் அதன் மூலம் நான் மாதம் 20,000/- சம்பாதித்து வந்ததாகவும் சொல்லி உள்ளதை காட்ட எந்த ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் எனவே நான் எந்த விதமான நிரந்தர வேலையிலும் இல்லை என்றால் சரியல்ல. மேற்குறிய விபத்து எனது கவனக்குறைவால் நிகழ்ந்துள்ளதால் இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல அதேபோல் ஒன்றாவது எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் இதில் காப்பீடு விதிமுறை மீறல் உள்ளது எனவே அதன் அடிப்படையிலும் இரண்டாவது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால்சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---